# LOYOLA COLLEGE (AUTONOMOUS), CHENNAI – 600 034

**B.A.** DEGREE EXAMINATION – **TAMIL LITERATURE**

FIRST SEMESTER – **NOVEMBER 2019**

**16/17/18UTL1RL01 – GENERAL TAMIL-MODERN LITERATURE**

Date: 09-11-2019 Dept. No. Max. : 100 Marks
Time: 09:00-12:00

**பகுதி - அ (10 x 2 = 20 மதிப்பெண்கள்)**

**விடையொன்றுக்கு 20 சொற்களில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

01. தமிழகம் செழிக்கக் காரணமான ஆறுகளாக பாரதியார் எவற்றைக் கூறுகின்றார்?
02. எளிமை என்பது என்னவென்று கண்ணதாசன் குறிப்பிடுகின்றார்?
03. தமிழர்க்கோ தமிழுக்கோ இடையூறொன்று
    தாம்செய்து வாழ்ந்தநாள் மலையேறிற்றே! - பொருள் தருக.
04. காதல்பார்வை பரிமாற்றம் குறித்து மீரா கூறுவதென்ன?
05. இந்தியாவிலுள்ள மத்தியதர வர்க்கத்தின் எரியும் பிரச்சினை யாது?
06. அன்னத்தைக் காப்பாற்றிய பணிப்பெண் யார்? அவள் கணவன் யார்?
07. பாண்டியன் பரிசில் காணப்படும் சிறந்த உவமைகளில் ஒன்றனை எழுதுக.
08. நீலன் எத்தகைய தீக்குணம் உடையவன்?
09. தொல்காப்பியர் குறிப்பிடும் உரைவகை நான்கு எவை?
10. நாவலுக்கும் சிறுகதைக்கும் இடையேயான வேறுபாடுகளில் இரண்டனை எழுதுக.

**பகுதி - ஆ (5 x 7 = 35 மதிப்பெண்கள்)**

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒன்றரைப்பக்க அளவில் விடையளிக்க.**

11. தமிழ்நாட்டின் பெருமைகளைப் பாரதியார் எவ்வாறு பாடுகிறார்?
12. கோவில் வழிபாடு எனும் கவிதைச் செய்திகளை எழுதுக.
13. மு.மேத்தா, காந்தியையும் இன்றைய அரசியலையும் ஒப்பிட்டு எழுதியதில் சிலவற்றை எழுதுக.
14. சினிமா அவலத்தை வைரமுத்து எவ்வாறு பாடுகிறார்?
15. பொன்னப்பன், அன்னம் உரையாடலில் வெளிப்படும் நகைச்சுவைச் செய்திகளை எழுதுக.
16. கறுப்புத்தமிழனே கலங்காதே எனும் கட்டுரைச் செய்திகளை எழுதுக.
17. தாழ்வு மனப்பான்மை தமிழர்க்குத் தடையாக உள்ளதை விளக்குக.

**பகுதி - இ (3 x 15 = 45 மதிப்பெண்கள்)**

**மூன்றுபக்க அளவில் விடையளிக்க.**

18. மனோன்மணீயத்தில் தமிழின் ஆழம், இலக்கணம், அழியாத்தன்மை இவற்றை விளக்கும் கதைகளை எழுதுக.

    **( அல்லது )**

    சரஸ்வதி கேட்ட அடையாள அட்டை, என்னைப்போல் அழகி ஆகிய கவிதைகளை விளக்குக.

19. அன்னத்தின் பண்பு நலன்களைப் பாண்டியன் பரிசு குறுங்காப்பியம் வழி விளக்குக.

    **( அல்லது )**

    நரிக்கண்ணனின் சூழ்ச்சிகளாகப் பாண்டியன் பரிசில் காட்டப்படும் நிகழ்வுகளை எழுதுக.

20. கண்மாய் அழிகிறது என்னும் சிறுகதைச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

    **( அல்லது )**

    ‘காலத்தை வகுத்தவன் கால அருமை மறந்தது ஏன்?’ எனும் கட்டுரைச் செய்திகளை விளக்குக.

---